අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# நாடகமும் அரங்கியலும்

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 51 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**நாடகமும் அரங்கியலும் - I, II** **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## நாடகமும் அரங்கியலும் - I

**கவனிக்க :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* ***1*** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.

1. நாடகம் ஆற்றுகை செய்யப்படும் போது அவசியமான மூலகங்கள்
   (1) நடிகன், பார்ப்போர், அரங்கவெளி (2) நடிகன், அரங்கவெளி, எருத்துரு
   (3) நடிகன், அரங்கவெளி, நெறியாள்கை (4) நடிகன், அரங்கவெளி, காட்சியமைப்பு

2. கதை தழுவிவரும் கலை வடிவம்
   (1) ஓவியம் (2) சிற்பம் (3) நாடகம் (4) கட்டடம்

3. நாடகத்தின் வடிவத்தினைக் குறிக்கும் பதம்
   (1) நாடகக் கரு (2) நாடக மோதுகை
   (3) நாடக மோடி (4) நாடகக் கதை

4. தயாரிப்பாளரின் பிரதான பணி
   (1) பயிற்சியளித்தல் (2) நிதிக்கையாள்கை
   (3) நினைவூட்டுதல் (4) காட்சியமைத்தல்

5. நாடகக் கலையில் காணப்படும் சித்திரிப்புக்களின் எண்ணிக்கை
   (1) 2 (2) 3 (3) 4 (4) 5

6. நாடகத்தில் கதை நிகழும் காலத்தினை வெளிப்படுத்த உதவும் பிரதான அரங்கமூலகம்
   (1) ஒப்பனை (2) இசை (3) ஒளி (4) காட்சியமைப்பு

7. பின்வருவனவற்றுள் கஞ்சற்கருவியாக அமைவது
   (1) மத்தளம் (2) வீணை (3) சலங்கை (4) புல்லாங்குழல்

8. “ஆரொடு நோகேன் நாடகத்தில் ‘ அம்புலி மாமா ‘ அழகழ சொக்கா …” என்ற பாடல் மூலம் உணர்த்தப்படுவது

(1) கரு (2) கதை (3) மோதுகை (4) மோடி

9. நம்மைப் பிடித்த பிசாசுகள் எந்த வகை நாடகம்

(1) மோடிமை நாடகம் (2) யதார்த்த நாடகம்
(3) சிறுவர் நாடகம் (4) தெருவெளி நாடகம்

10. ஆரோடு நோகேன் நாடகத்தில் இறுதியில் நிகழ்த்தப்படும் நாடகத்தின் பெயர்

(1) இலட்சியம் (2) பாடு (3) கனவு (4) சாபம்

11. நாடகமொன்றில் சீமாட்டி பாத்திரம் கைப்பை ஒன்றை வைத்திருக்குமாயின் அக்கைப்பொருளை தீர்மாணிப்பவர் யார்

(1) காட்சிஅமைப்பாளர் (2) மேடைமுகாமையாளர்
(3) தயாரிப்பாளர் (4) ஒப்பனையாளர்

12. நடிப்புடன் தொடர்புபடாத பதம்

(1) பாகமாடுதல் (2) வகிபாகமேற்றல்
(3) இணைப்பாக்கம் செய்தல் (4) நடிபங்கேற்றல்

13. நாடகக்காட்சி ஒன்றை அழுத்த உதவுவது

(1) கரு இசை (2) பின்நோக்கு இசை
(3) குறியீட்டு இசை (4) பின்னணி இசை

14. நாடகப் படைப்பாக்கத்தை முழுமைப்படுத்த உதவுவது

(1) காட்சியமைப்பு (2) வேடஉடை
(3) இசை (4) ஒளி

15. படச்சட்டமேடையில் அதிக தாக்கம் மிக்க நடிப்பிடம்

(1) DC (2) UC (3) CC (4) UR

16. புதியதொரு வீடு நாடகத்தில் பிரதான மோதுகையினை வெளிப்படுததும் பாத்திரங்கள்

(1) மாயன் - மாசிலன்
(2) மாயன் - மயிலி
(3) மயிலி - மையுண்டநெடுங்கண்ணாத்தை
(4) மயிலி - மறைக்காடர்

17. நியம அரங்கில் தயாரிப்புச் செயன்முறையை குறிப்பது

(1) ஒத்திகை (2) புதிதளித்தல் (3) ஊமம் (4) படிமம்

18. வேளாண்மையுடன் தொடர்புடைய ஆடல்

(1) ஒயிலாட்டம் (2) வீரபத்திரர் ஆட்டம்
(3) புரவி ஆட்டம் (4) காவடி ஆட்டம்

19. முத்துமாரி அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய கூத்து

(1) காமன் கூத்து (2) காத்தவராயன் கூத்து
(3) வசந்தன் கூத்து (4) வடமோடிக் கூத்து

20. படச்சட்டமேடையின் நடிப்பிடங்களை பயன்படுத்தி நாடகங்களின் அர்த்தங்களைத் தீர்மாணிப்பவர்

(1) நெறியாளர் (2) நடிகன்

(3) காட்சியமைப்பாளன் (4) மேடைமுகாமையாளன்

21. நாடக ஒத்திகையில் நடிகர்களிற்கிடையிலான முரண்பாட்டை நீக்க உதவுவது

(1) விமர்சனம் (2) குறைகளை கண்டுபிடித்தல்

(3) பாராட்டுதல் (4) அரங்க விளையாட்டுக்கள்

22. பேராசிரியர் சி.மௌனகுருவின் சிறுவர் நாடகமாக அமைவது

(1) தப்பி வந்த தாடி ஆடு (2) பஞ்சவர்ணநரியார்

(3) ஒற்றுமையின் சின்னம் (4) அரசனின் புத்தாடை

23. திரௌபதை அம்மனுடன் தொடர்புடைய கூத்து

(1) காமன் கூத்து (2) பொன்னர் சங்கர

(3) காத்தவராயன் கூத்து (4) அருச்சுணன் தபசு

24. கிறிஸ்தவக் கதைகளைப் பயன்படுத்தும் கூத்து மோடி

(1) வடமோடி (2) தென்மோடி (3) கோவலன் கூத்து (4) வடபாங்கு

25. சிறுவர் நாடகத்தின் பிரதான அரங்க மொழி

(1) சொல்லாடல்,ஆடல் (2) ஆடல்,பாடல்

(3) பாடல், ஊமம் (4) ஊமம், சொல்லாடல்

26. ஏகலைவன் என்ற நாடகத்தினை நெறிப்படுத்தியவர்

(1) க.சிதம்பரநாதன (2) இளைய பத்மநாதன்

(3) குழந்தை ம.சண்முகலிங்கம் (4) சி.மௌனகுரு

27. கோவலன் கூத்தில் விசேட ஆடலுக்குரிய பாத்திரம்

(1) கோவலன் (2) கண்ணகி (3) வஞ்சிப்பத்தன் (4) காவலன்

28. கல்முனையில் நிகழ்த்தப்படும் சடங்கு சார் நாடகம்

(1) குமாரதெய்வச் சடங்கு (2) காட்டேறித் திருவிழா

(3) வேடன்பறி (4) பாண்டவர் வனவாசம்

29. இசை நாடகத்தின் பாடல்கள் அமைப்பதற்கு உதவி நிற்கும் இசை வடிவம்

(1) ஹிந்துஸ்தானி இசை (2) கர்நாடக சங்கீத இசை

(3) நாட்டார் இசை (4) பொப்பிசை

30. உலக நாடக தினம் கொண்டாடப்படுவது

(1) மார்ச் 25 (2) மார்ச் 26 (3) மார்ச் 27 (4) மார்ச் 28

31. கூத்தில் பாத்திர அறிமுகத்திற்கு உதவுவது

(1) காப்புப் பாடல் (2) வரவுப் பாடல்

(3) தர்க்கப் பாடல் (4) சபைத்தரு

32. ஆக்கியல் அசைவாக அமைவது

(1) நிற்றல் (2) இருத்தல் (3) யோசித்தல் (4) பறத்தல்

33. நாடக எழுத்துருவில் மறைந்து காணப்படும் அர்த்தங்களை கண்டுகொள்ள உதவும் ஒத்திகை

(1) வாசிப்பு ஒத்திகை (2) மனன ஒத்திகை

(3) அசைவு ஒத்திகை (4) இசை ஒத்திகை

34. ஆரொடு நோகேன் நாடகத்தின் ஒப்பனையில் கருத்தில் கொள்ளப்படுவது

(1) யதார்த்தம் (2) மோடிமை

(3) யதார்த்தமும் மோடிமையும் (4) யதார்த்தமும் மரபும்

35. முகில்களைக் காட்சியமைப்பாக வெளிப்படுத்துவதற்கு உதவும் திரை

(1) காட்சித்திரை (2) தொங்கு திரை (3) முன் திரை (4) பக்கத்திரை

36. அருகிலுள்ள படத்திற்குரிய அரங்கு



(1) சொக்கரி

(2) கோலம்

(3) நாடகம்

(4) நூர்தி

37. அருகிலுள்ள வாத்தியக்கருவி பிரதானமாகப் பயன்படுத்தப்படும் அரங்கு



(1) காத்தவராஜன் கூத்து

(2) காமன் கூத்து

(3) வடமோடிக் கூத்து

(4) தென்மோடிக் கூத்து

38. அருகிலுள்ள அரங்கவியலாளர் நிறுவிய நாடக நிறுவனம்



(1) சுகுண விலாச சபை

(2) சரஸ்வதி விலாச சபை

(3) லங்கா சுபோத விலாச சபை

(4) மட்டக்களப்பு நாடக சபை

39. அருகிலுள்ள படம் குறிக்கும் ஆற்றுகை வடிவம்




(1) காவடி

(2) கரகம்

(3) கோலாட்டம்

(4) ஒயிலாட்டம்

40. அருகிலுள்ள படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஒளி வகை



(1) பொட்டொளி

(2) பாத ஒளி

(3) பரப்பொளி

(4) பெருக்கொளி

**

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 51 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

## நாடகமும் அரங்கியலும் - I, II

## நாடகமும் அரங்கியலும் - II

**கவனிக்க :**

* **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

*1.* கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

(i) பேசாலையில் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்படும் சடங்கு. *(01 புள்ளி)*

(ii) நாடகத்தில் வெளிப்படுத்தப்படும் பிரதான செய்தி எவ்வாறு அழைக்கப்படும்? *(01 புள்ளி)*

(iii) நெறியாளரைத் தெரிவு செய்பவர்? *(01 புள்ளி)*

(iv) நாடக அரங்க கல்லூரியினை நிறுவியவர் யார்? *(01 புள்ளி)*

(v) சிறுகோல்களை ஒன்றுடன் ஒன்று தட்டி ஆடும் கூத்து யாது? *(01 புள்ளி)*

(vi) வனவாசத்தின் பின் எனும் நாடகத்தினை எழுதியவர் யார்? *(01 புள்ளி)*

(vii) கலையரசு சொர்ணலிங்கத்திற்கு புகழீட்டித்தந்த பெண் பாத்திரம் எது? *(01 புள்ளி)*

(viii) 'சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்' என்ற பாடலில் வெளிப்படும் மனநிலை. *(01 புள்ளி)*

(ix) இசை நாடகத்தின் பிரதான வாத்திய கருவிகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(x) காமன் கூத்தின் பிரதான பாத்திரங்கள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

*2.*

(i) ஆற்றுகை என்றால் என்ன? *(02 புள்ளிகள்)*

(ii) ஆற்றுகை கலைகளின் இயல்புகளை பட்டியற்படுத்துக. *(05 புள்ளிகள்)*

(iii) நாடகத்தை ஆற்றுகை அல்லாத கலைகளிலிருந்து வேறுபடுத்துக. *(05 புள்ளிகள்)*

*3.*

(i) ஊமம் என்றால் என்ன? *(02புள்ளிகள்)*

(ii) ஊமத்தின் வகைகளை குறிப்பிடுக. *(02புள்ளிகள்)*

(iii) நடிகனுக்கு புதிதளித்தலின் அவசியத்தை விளக்குக. *(04புள்ளிகள்)*

(iv) நடிகன் பாத்திரத்தினை வெளிப்படுத்தும் ஆற்றினை விளக்குக. *(04புள்ளிகள்)*

**4.**

(i) மட்டக்களப்பின் மரபு வழி கூத்துக்களை பட்டியற்படுத்துக. *(04 புள்ளிகள்)*

(ii) வட்டக்களரி அரங்கினை வரைந்து விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கூத்துப் புத்தாக்க முயற்சிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

**5.**

(i) நெறியாளரது தகமைகளை இனங்கண்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

(ii) ஆரொடு நோகேன் நாடகத்தின் நெறியாள்கைக்குரிய திட்டமிடலை எவ்வாறு மேற்கொள்வீர் என்பதனை விளக்குக. *(06 புள்ளிகள்)*

**6.** பின்வரும் அரங்க கலைஞர்களின் நாடகப் பணி தொடர்பாக மதிப்பீடு செய்க.

(i) வி.வி.வைரமுத்து

(ii) கலையரசு சொர்ணலிங்கம்

(iii) குழந்தை ம.சண்முகலிங்கம்

*(04×03 = 12 புள்ளிகள்)*

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினை** தெரிவுசெய்து அவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) காத்தவராயன் கூத்து

(ii) சிறுவர் அரங்கு

(iii) இசைநாடகம்

(iv) சொக்கரி

(v) ஒளி விதானிப்பு

*(04×03 = 12 புள்ளிகள்)*

***